செய்தி வெளியீடு எண். 165 நாள். 26.03.2018

**<u>தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகள் 28.03.2018 அன்று நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்</u>**

2017 – 2018-ம் ஆண்டிற்கான தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகள் 28.03.2018 அன்று காலை 9.00 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒருங்கிணைந்த விளையாட்டரங்கத்தில் நடத்தப்படவுள்ளது.

இத்தேர்வு போட்டியில் கலந்து கொள்பவர்கள் 2017 டிசம்பர் 31-ம் தேதியன்று 25 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கூடைப்பந்து, பளுதுக்குதல், நீச்சல், மல்யுத்தம், வளைகோல்பந்து, குததுச்சண்டை, தடகளம், இறகுபந்து, மேசைபந்து, கபடி, கோ கோ மற்றும் கையுந்து பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகளின் தேர்வு போட்டிகள் நடைபெறவுள்ளது.

மேலும், விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் தொலைபேசி எண்.044-27666249 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**